DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.83/2024 | Deposition of Witness for : PW4 |
| Name : முத்துமுருகன் | Father/Husband Name : பரமசிவன் |
| Age : 32 | Village : மாணாட்டூர் |
| Taluk : ஏரல் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28 April 2026.
Accused Present.

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் தற்போது மாணாட்டூரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எதிரியினுடைய வீட்டுக் கழிவு நீர் அ.சா.1ன் வீட்டு வாசலில் ஒரு வாரமாக தேங்கியிருந்தது. அ.சா.1க்கும் எதிரிக்கும் இடையே மேற்படி பிரச்சனை சம்பந்தமாக பிரச்சனை நடந்து கொண்டிருந்தது. 29.10.2023 ஆம் தேதி நான் குலசைக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலை 6.00 மணியளவில் வந்தேன். அ.சா.1ம், அ.சா.3ம் மேற்படி கழிவு நீர் சம்பந்தமாக எதிரியிடம் பேசிக்கொண்டிருந்தபோது எதிரி அ.சா.1 ஐ சாதியை சொல்லி இழிவாகவும், அ.சா.1 ஐப் பார்த்து கூட்டிக் கொடுத்த பயலே, பொட்டப் பயலே என அவதூறான வார்த்தைகளால் பேசி அ.சா.3ன் தாலிச்செயினை எதிரி பறித்ததாகவும், எதிரி மாடு மேய்க்கும் போது வைத்திருந்த கம்பால் அ.சா.1 ஐ தலையில் அடித்ததாகவும், TVMCH மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சையில் சேர்ந்திருந்ததாகவும் கேள்விப்பட்டு நான் அவரை மருத்துவமனையில் சென்று பார்த்தபோது மேற்படி விபரத்தை அ.சா.1 என்னிடம் கூறினார். அ.சா.1 ஐ நான் மருத்துவமனையில் பார்க்கச் சென்றபோது போலீசார் அ.சா.1 ஐ விசாரணை செய்து அவரிடம் இருந்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் நானும் அ.சா.3ம் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **அறிவேன் சாட்சியின் முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் வழக்கு சம்பவம் குறித்து என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

2. அ.சா.1, ஆறுமுகநயினார் மற்றும் நான் இந்த வழக்கின் எதிரியின் கணவரை அரிவாளால் வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக ஒரு வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கில் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளேன் என்றால் சரிதான், அந்த வழக்கு நாசரேத் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது, சிசி 67/2024 என்ற வழக்கு ஆகும். நாசரேத் காவல்நிலையத்தில் என் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கின் குற்ற எண்.98/2023, இந்த வழக்கின் எதிரி மீது பதிவு

செய்யப்பட்ட குற்ற எண்.99/2023 என்றால் சரிதான். நாசரேத் காவல்நிலையத்தில் எங்கள் மீது தான் எதிரியின் கணவரை வெட்டியதாக முதலில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், அது பொய் வழக்கு ஆகும்.

3. இந்த வழக்கில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் ஊரில் இருந்து, அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன், அந்த கையொப்பத்தை எப்போது செய்து கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் கையொப்பம் செய்து கொடுத்தேன். அ.சா.1 எப்போது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றால் சம்பவம் நடந்த அன்றே சிகிச்சைக்காக சேர்ந்துவிட்டார். நாங்கள் எதிரியின் கணவரை அரிவாளால் வெட்டிய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யான காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல, நான் சம்பவம் நடைபெற்ற சமயத்தில் குலசேகரப்பட்டினத்தில் வேலைக்கு சென்றுவிட்டேன். எதிரியின் கணவரை அருவாளால் வெட்டி அவருக்கு காயம் ஏற்படுத்திய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகவும், எதிரியின் கணவரை சரிகட்டுவதற்காகவும் எதிரியின் மீது பொய்யாக புகாரை அ.சா.1 உற்பத்தி செய்து அதை கொடுத்து அந்த வழக்கில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்து தற்போது சம்பவத்தை கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. அ.சா.1ன் மனைவி பெரிய மருத்துவமனையில் Lab Technician ஆக வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அ.சா.1ன் மனைவி அ.சா.3ன் ஏற்பாட்டின் பேரில் பொய்யான காயத்தை ஏற்படுத்தி அவரது செல்வாக்கை பயன்படுத்தி அரசு மருத்துவமனையில் அ.சா.1 சேர்ந்து பொய்யான வழக்கை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன், நான் குலசேகரபட்டினத்தில் வேலைக்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது நான் சம்பவ இடத்தில் இல்லை என விசாரணையின்போது கூறினேனா என்றால் கூறினேன், அதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு நான் சம்பவ இடத்தில் இல்லாத பட்சத்தில் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை ஆனால் நான் முன்ஜாமீன் பெற்று காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் பொய்யான வழக்கு போட்டிருந்தார்கள், அதனால் முன்ஜாமீன் பெற்றேன். சிசி 67/2024 என்ற வழக்கில் நான் 3 ஆவது எதிரியாக உள்ளேன், போலீசார் புலன்விசாரணை செய்து நான் சம்பவ இடத்தில் இருந்ததாக அறிந்துகொண்ட பிறகு தான் என்னை அந்த வழக்கில் எதிரிகளுல் ஒருவராக சேர்ந்துள்ளார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் நான் இல்லாதபட்சத்தில் சட்ட போராட்டம் நடத்தி அந்த வழக்கில் இருந்து வெளியே வந்திருக்காலம் ஆனால் நான் முன்ஜாமீன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு உண்மையான வழக்கு என்பதால் அந்த வழக்கில் போலீசார் என்னை கைது செய்துவிடக்கூடாது என்பதால் தான் நான் அந்த வழக்கில் முன்ஜாமீன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

5. அ.சா.1ன் குடும்பம் எதிரியின் குடும்பத்தை விட பணபலத்திலும் ஆள்பலத்திலும் உயர்ந்தவர்கள் என்றால் சரியல்ல, எதிரியின் குடும்பத்தில் தான்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.04.28 17:56:42 +0530

பணபலமும் ஆள்பலமும் உள்ளது. சிசி 67/2024 என்ற வழக்கில் எதிரியின் கணவருக்கு கொடுங்காயம் ஏற்படுத்திவிட்டு அ.சா.1 அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தும், நாங்கள் முன்ஜாமீன் எடுக்கும்வரை போலீசார் எங்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததற்கான காரணம் எங்கள் பணபலம் என்றால் சரியல்ல.

6. எதிரியை ஒரு பெண் என்று பாராமல் அவர்மேல் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு அவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கினோம் என்றால் சரியல்ல. எதிரியின் கணவரை தாக்கிய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய அண்ணன் மகன் ஆவார். இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.2 சுமா என்பவர் அ.சா.1க்கு என்ன உறவு முறை என்றால் சித்தி ஆகும். அ.சா.3 இசைக்கலா அ.சா.1ன் மனைவி என்றால் சரிதான். அ.சா.4 நான் அ.சா.1ன் சித்தப்பா என்றால் சரிதான். ப.சா.5 முத்துலெட்சுமி என்பவர் அ.சா.1க்கு என்ன உறவு முறை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ப.சா.5 இன்னும் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லவில்லை என்பதால் அவர் யார் என்று தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எதிரி எந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் நாங்கள் தான் எதிரியின் கணவரை தாக்கிவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.28 17:56:48 +0530

Judicial Magistrate, Sathankulam.